# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 674/5 — 1991 අගෝස්තු 05 වැනි සඳුදා — 1991.08.05

674/5 ஆம் இலக்கம்—1991 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) — மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு—மத்திய மாகாண மாகாண சபை

1990 ம் ஆண்டின் 6 ம் இலக்க சுகாதார சேவைகள் நியதிச்சட்டம்

(1990.08.09 திகதியன்று ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்டது)

### மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினை நிர்வகிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமான நியதிச்சட்டம் இலக்கம் 6—1990

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 13 ம் திருத்தத்திற்காட்டிய 1 ம் அட்டவணை (I, II, III, IV, V) விடயத்திற்கமைய மத்திய மாகாணத்திற்கென சுகாதார சேவைகள் திணைக்களம் ஒன்றினை தாபிப்பதற்கானதொரு நியதிச்சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண சபையினால் பின்வருமாறு நிறைவேற்றப்படுவதாகுக.—

(1) இந்நியதிச்சட்டம் 1990 ம் ஆண்டின் 6ம் இலக்க மத்திய மாகாண (சுகாதார சேவைகள் திணைக்கள நிர்வாகத்தினை மேற்பார்வை செய்யும் தத்துவங்கள்) நியதிச்சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். இந்நியதிச்சட்டம் மாகாண ஆளுநரினால் நியமிக்கக் கூடியதான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும். — சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

(2) சுகாதார சேவைகள், மருத்துவ நிலையங்கள் திணைக்களமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவசியமெனக் கருதக்கூடியவாறான பெரும்பாக சுகாதார அதிகாரிகள், மற்றும் அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோரை இச் சேவைக்காக நியமித்தலும் வேண்டும். — சுகாதார சேவைகள் திணைக்களம்.

(3) மாகாணத்திற்கென சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஒருவர், அல்லது அப்பதவியின் கருமங்களை ஆற்றுவதற்காக ஒருவரையும், சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர்கள், குறித்துரைக்கப்பட்ட ஏதாகினும் பணிகளை மேற்கொள்வதற்கென சுகாதார சேவைகள் உதவி பணிப்பாளர்களையும் நியமித்தல் வேண்டும். — பதவிகளுக்கு நியமனஞ் செய்தல்.

உத்தியோகத்தர்களின் தத்துவங்களும் கடமைகளும்.

(4) அமைச்சரின் பொதுப்பணியுரைகள், கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கமைவாக இந்நியதிச் சட்டத்தினால் வழங்கப்படும் தத்துவங்கள், ஆக்கப்படும் ஒழுங்கு விதிகள் என்பவற்றை செயல்படுத்தும் தத்துவம் இத்திணைக்களத்தைச்சேர்ந்த, அதிகாரிகள் அலுவலர்கள் பால் சார்ந்ததாதல் வேண்டும்.

உபவிதிகள்.

(5) (1) இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், அதன் ஏற்பாடுகளுக்காகவும் அவசியமெனக்கருதப்படும் உபவிதிகளை அமைச்சரானவர் ஆக்கலாம்.

(2) இந்நியதிச்சட்டத்தின் பொதுத்தன்மைக்கும், (I, II, III, IV, V) ஆகிய உற்பிரிவுகளினால் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கும் ஊறு விளையாவண்ணம் மாகாண அமைச்சர் இதன் கீழ் குறிப்பிடப்படும் சகல விடயங்களினதும் அல்லது ஏதேனும் விடயமொன்றினதும் தொடர்பாக உபவிதிகளை ஆக்கலாம்.

(அ) (விஷேட நோக்கமொன்றிற்காக அமைந்துள்ள வைத்தியசாலை, அல்லது போதனா வைத்தியசாலை தவிர்ந்த) வைத்தியசாலைகள், பிரசவ மனைகள், கிராமிய மருத்துவமனைகள் பொது வைத்தியசாலைகள் என்பன அமைத்தல்.

(ஆ) பொதுச் சுகாதார சேவை, சுகாதாரக்கல்வி, போஷாக்கு, குடும்ப நலன், தாய்சேய் நலன், உணவும் உணவுச்சுகாதாரமும், சூழல் சுகாதாரமும்.

(இ) மாகாணத்திற்கான வருடாந்த சுகாதார அபிவிருத்தித்திட்டம் சுகாதார அபிவிருத்தித்திட்டம், என்பவற்றைத் தயாரித்தலும் செயற்படுத்தலும்.

(ஈ) (மருந்துவகைகள் கொள்வனவு) தவிர்ந்த ஏனைய வசதிகளை (அ) உட்பிரிவில் காட்டிய மருத்துவமனைகளுக்கு வழங்குதல்.

(உ) (அ) உட்பிரிவில் காட்டப்பட்டுள்ள மருத்துவமனைகளில் கடமையாற்றும் மருத்துவ அலுவலர்களுக்கான (உள்நாட்டு) பட்டப்பின் கற்கை நெறிகளுக்கான புலமைப்பரிசில் வழங்கல்.

(3) இந்நியதிச்சட்டத்தின் கீழ் அமைச்சரால் ஆக்கப்படும் உப விதிகள் யாவும் மாகாண சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். உபவிதிகள் யாவும், மாகாண சபையின் அனுமதியின் பின்னரே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(6) இந்நியதிச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினால் ஒழிய "அமைச்சர்" எனப்படுபவர், சுகாதாரம் எனும் விடயத்திற்குப்பொறுப்பான, மத்திய மாகாண அமைச்சராவார்.

"பணிப்பாளர்" எனப்படுவர், மத்திய மாகாணத்தின் சுகாதார சேவைகள், பணிப்பாளர் ஆவார்.

08-853/1